

# அவில்லியா

# உடலுருவ அமைப்பு மற்றும் களப்பண்புகள

அவில்லியா என்கிற கடற்பன்றி, கடலை தன் வசிப்பிடமாகக் கொண்ட பாலூட்டி மிருகமாகும். அதனுடைய உடல் சற்று நீளமான வட்டமான அமைப்பைக் கொண்டது.

சாம்பல்–இளஞ்சிவப்பு நிறமான உடல் விரிப்பினில் மயிர் அற்பமாக காணக்கூடியதாகவுள்ளது. அதனுடைய தலைப்பகுதி வட்டமாகவும் இருவிழிகள் சிறியதாகவும் காணலாம். பன்றியினுடையது போல் பெரிய மூக்கையும கொண்டது.

பெண் அவில்லியாவின் உடலில் ஸ்தனங்கள் காணப்பெறுகின்றன.



“கடற் பன்றி” என்றும் அழைக்கப்படுகின்ற, சாதுவான மிருகமான அவில்லியாவின் உணவுமுறையை அடிப்படையாகக் கொண்டு அதை “கடற் பசு” என்ற பெயரால் அழைக்கப்படுவதும் உண்டு. சிரேனியா என்கிற பாலூட்டி வகை மிருகங்களில் அவில்லியா மட்டுமே கடல் சார்ந்த மிருகமாக கானப்படுகின்றது. இருப்பினும், இது சுவாசிப்பதற்காக நீரின் மேல்பரப்பிற்கு வருவதுண்டு. ஆவ ில்லியாவின் விஞ்ஞானப் பெயர் Dugong dugon.

# அளவு

நன்கு வளர்ந்த அவில்லியா ஒன்று சுமார் 8–10 அடி நீளமானதும் 250–255kg எடையுமுடையது. பிறக்கும் போது குட்டி ஒன்றின் எடை சுமார் 20–25kg உம், நீளம் 1 மீட்டரும் ஆகும். இளம் பருவத்தில் அவில்லியாவின் ஆண்–பெண் வேற்றுமை காண இயலாது.



# மூச்சு இயக்கம்

கடலில் வசித்தாலும் அவில்லியா வெளிக் காற்றை சுவாசிக்கக்கூடியதாகவுள்ளது. தண்ணீரிற்குள் திமிங்கலம் போல வெகு நேரம் வரை மூச்சு தாங்கிக்கொள்ளும் ஆற்றல் அவில்லியாவிடம் இல்லாமையால் அடிக்கடி மேல் பரப்பிற்கு வந்து மூச்சு வாங்கிப் போவதுண்டு.

# அவில்லியாவின் கண் பார்வை

இதன் கண் பார்வையோ மிகவும் பலவீனமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீரிற்குள் செல்லல்

நீரிற்குள் செல்வதற்காக பின்புறத்திலுள்ள வாலை பயன்படுத்தும். வாளை மேலேகீழேயுமாக அடித்துக்கொண்டு செல்வதை மற்ற மீன்களுக்கு ஒப்பானதாக இருக்கிறது. உடலில் இரு பக்கங்களிலும் அமைந்துள்ள வாற் செட்டை நீந்துவதற்கும் பயன்படுத்தும்.

அவில்லியா மிகவும் மெதுவாக நீந்தும். அது ஒரு மணி நேரத்திற்கு 10km தொலை தூ ரம் மட்டுமே நீந்தும். ஆனால் அபாயம் வருவதை உணரும் போது அது ஒரு மணி நேரத்திற்கு 35km வேகத்தில் நீந்துவது குறிப்பிடத்தக்கது.

# கைக்கொள்ளளப்படும் பாதுகாப்பு உபாயங்கள

இதன் உடல் அளவின் பெரிதாக இருப்பதனால், திமிங்கலம், கடல் முதலை போன்ற பெரிய சீவிகள் மட்டுமே அவில்லியாவை இரையாகக் கொள்ளும். அபாயம் நேருவது

அறிந்தால் அது அபாயத்தை தவிர்த்து ஓடிச் செல்லும்.

# ஒலி எழல்

இனச்சேர்க்கை பருவத்தில் அவில்லியா கீச்சிடுவதும் குரைவதும் கேட்கக்கூடும். பிடிபட்டு, வேதனைப்பட்ட அவில்லியா ஒன்று சில சமயம் தாழ்ந்த சுருதியில் அழுவதை மீனவர்கள் கேட்டதுண்டு.

# உணவூட்டல்

கடற் புல் உண்ணும் இலங்கை கடற் பகுதியில் வசிக்கும் அவில்லியா ஹலோடூலா (Halodula) என்கிற கடற் புல் வகையை விரும்பி உண்பதை குறிப்பிடத்தக்கது. ஹலோடூலா மற்றும் ஹலோபிலா (Halophila) கடல் முகத்துவாரத்தில் மற்றும் ஆளமற்ற கடலில் வளரும் தாவர வகைகளாகும்.

அவில்லியா தினமும் அதிக அளவில் கடல் புல் உண்பதுண்டு. ஹலோடூலா மற்றும் ஹலோபிலா அதிக ஊட்டச்சத்து உள்ள புற்களாக அடையாளம் காணப்பட்டுள்ளது. புல் உண்பதற்கு அதனுடைய முகப்பகுதி இயல்பாகவே கீழ் நோக்கி அமைந்துள்ளது. புற்களை வேர்களோடு இழுத்துச் சாப்பிடுவது வழக்கம்.

மேலுதட்டில் வளர்ந்த சிலிர் முற்கள் புல்லை தேடுவதற்கும் அதை கிளித்து உண்ணவும் உதவும். பருமனான வாய், புல்லை கிரகிப்பதற்காகவும், தட்டையான பற்கள் மெல்லல் செய்கைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இலங்கை கடலில் சில தசாப்தங்களுக்கு முன் ஒரு கூட்டத்தில் சுமார் 100 மிருகங்கள் காணக்கிடைத்ததை குறிப்பிடத்தக்கது.

# வாழிடம்

அவில்லியா பெரும்பாலும் விரிகுடா, காயல், கண்டல் தாவரங்கள் இருக்கும் இடங்கள் போன்ற ஆளமற்ற மற்றும் அமைதியான கடற் பகுதிகளில் காணப்பெறும். இவ்விடங்கள் கடலலைகள் மற்றும் புயல்களால் பாதிப்பு ஏற்படாத இடங்களாகும். இவ்விடங்கள் கடற் புல்வெளிகளுக்கு ஒப்பானவைகளாகும்.

# வாழ்க்கை சுழற்சி

அவில்லியா நீண்ட ஆயுள் கொண்ட விலங்காகும். அது கிட்டத்தட்ட 70 வருடங்கள் வாழக்கூடும். இரு பால்களும் 10 வருகூ கட்டத்திலே பாலியல் முதிர்ச்சி அடையும். சில அரிய சந்தர்ப்பங்களில் பெண் அவில்லியாவுடைய பாலியல் முதிர்ச்சி 17 வயது வரை தாமதமடையும். அவில்லியாவின் இனப்பெருக்கம் மிகவும் மந்தமாகவுள்ளது. இரண்டிலிருந்து ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை கன்றை ஈன்றுகின்றதை காணலாம். ஆளமற்ற கடல் நீரிற்குள் பிறக்கும் குட்டியோ தனது முதலாவது மூச்சினை வாங்குவதற்கு நீர் பரப்பிற்கு மேலே வருகின்றது. குட்டியானது 18 மாதங்கள் வரை பால் குடித்தே வாழும். அவில்லியா தாயானது தனது பச்சிளங்குழந்தையை மிகவும் சிறந்த முறையில் பேணிக்காப்பது குறிப்பிடத்தக்கது. அவில்லியா தாயும் கன்றுகளுக்குமிடையில் தொடர்ப்பு செய்வதற்கு ஒரு தனித்துவமான கூவல் ஒன்றினை பயன்படுத்துகின்றது. குட்டியோ தாயை விட்டு தனியாக அப்பால் செல்வது மிகவும் அரிது.

# அவில்லியாவை அடயாளங்காணுதல்

அவில்லியாக்கள் கடலில் மட்டும் வசிக்கும் ஒரு விசேட பாலூட்டி மிருகமாகும்.

அவில்லியா ஒரு பாலூட்டியாக விளங்குவதேன்?
- அவில்லியா கன்று பால் குடித்து வளரும்.
- பெண் அவில்லியாவிற்கு பாலூட்டும் ஸ்தனங்கள் உண்டு.
- உடலில் மயிர் காணப்படும். இருப்பினும் அவில்லியாவின் உடலில் மயிர் வெகு குறைவாகவுள்ளது
- இரத்தம் வெப்ப நிலையில் உள்ள தண்டெலும்பு விலங்குகளாகும்.

# தெரிந்துக்கொள்ளுங்கள்

ஓங்கில், திமிங்கலம் முதலிய கடல் விலங்குகளை விட அவில்லியா யானையின் களப்பன்புகளை ஒத்திருப்பதை அறியத்தக்கது

# பரப்பீடு

இந்திய சமுத்திரத்திலும், கிழக்கு அபிரிக்காவிலிருந்து அவுஸ்திரேலியா வரைக்கிடையிலான கடல் பரப்பினிலும் வனுஆத்து தீவு, மேற்கு பசிபிக் கடலிலும் பண்டைய காலத்தில் பெருமளவு அவில்லியா வியாபித்திருந்ததை குறிப்பிடத்தக்கது. இரை மற்றும் எண்ணைய்க்காக அதிகளவில் வேட்டையாடுவதன் காரணமாக இன்று அவில்லியா முற்றுமுழுதாக அழிவடைந்துள்ளமை பரிதாபமுண்டாகின்ற விடயமாகும்.

இலங்கையில் புத்தளம், கல்பிட்டி, மன்னார், யாழ்ப்பானம், மட்டக்களப்பு, திருகோணமலை முதலிய பிரதேசங்களில் அவில்லியா கூடுதலாக இருந்ததை ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தென் இலங்கை கடல் பகுதியிலும் அதிகளவு இருந்ததை ஆராய்ச்சிகளினூடாக தெரியவந்துள்ளது.

தற்போதைய இலங்கை கடலில் அவில்லியாவின் பிரசன்னம் கேள்விக்குறியாகவுள்ளது. அதனால் முன்னரை விட அவில்லியா பேணுவதில் அக்கறை கொள்ள வேண்டிய கட்டாயம் உருவாகியுள்ளது.

# அபாய கட்டம் நேரிட்டது

19 வது நூற்றாண்டில் மீனவர்கள் பெருமளவில் அவில்லியாக்களை சட்ட விரோதமான முறையில் வேட்டையாடுவதில் ஈடுபட்டதனால் இன்று அவில்லியா முற்றுமுழுதாக அழிவடையக்கூடிய கட்டத்திற்கு வந்துள்ளமை கருத்தில் கொள்ள வேண்டிய விடயமாகும். இலங்கை அவில்லியாக்களை வனவிலங்கு மற்றும் தாவர பாதுகாப்பு

ஆணைச்சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்டுள்ளது.



# வாழிட அழிவு

பொருப்பற்ற முறையில் மீன் பிடிப்பது, கடலுக்கு பாதிப்பு எற்படும் வகையில் நடத்தும் கரையோார செயற்பாடுகள், கடல் நீரை மாசடையச் செய்வது, சுற்றாடலில் ஏற்படும் இயற்கை சமுத்திர அழிவுகளின் பௌதீக தாக்கங்கள், மண் அரிப்பு என்பவற்றினால் கடல் புற்களிற்கு பெரும் பாதிப்பை ஏற்படும். இக்காரணங்கள் கடற் புற்களை அழிவடைவதற்கு அல்லது தரம் குறைவதற்கும் காரணமானதாகவுள்ளன.

# அவில்லியாவை வேட்டையாடுவது

உலகளவில் உணவுக்காக அவில்லியாவினை வேட்டையாடியது இன்று மட்டுமல்ல, பல தசாப்தங்களுக்கு முன்னிருந்தே நடந்துகொண்டிருந்தது. இது கரையோார பிரதேச மக்களின் பாரம்பரிய உணவு வகையாகும். தனிப்பட்ட தேவைகளுக்கு மட்டுமல்லாது விற்பனைக்காகவும் அவில்லியா கொலை செய்தமை அதன் அழிவிற்கு மூல காரணியாகும். சில தசாப்தங்களுக்கு முன், பெருமளவில் நடந்த அவில்லியா வேட்டையாடுவது இன்று கூட தொடர்ந்து நடைபெற்று வருகின்றமை பரிதாபத்திற்குறிய விடயமாகும்.

# வலைகள் மற்றும் தூண்டில் இரையில் சிக்கிக் கிடப்பது

அனேகமான சந்தர்ப்பங்களில் அவில்லியாக்களை மீன்பிடி வலைகளில் மற்றும் தூண்டில் இரைகளில் சிக்கி இறந்து கிடப்பது ஒரு சாதாரணமான சம்பவமாகும். இது தவிர்த்து அவில்லியாவினை கொல்வதற்கு டைனமைட் பாவிக்கப்படுவதும் உண்டு.







# படகு ஓட்டும் போது உண்டாகும் கடுமையான ஒலி

மனிதர்களாகிய எங்களுக்கு தேவைப்படுவது போன்று அவில்லியாக்களுக்கும் அமைதியும் நிதானமும் தேவை. படகு வேகமாக ஓட்டுவதன் மூலம் எழும் சத்தத்தை அவில்லியாக்களை பயமுறுத்தக் கூடும். அதனால் அவிலியாக்கள் தன் ஆகாரமான கடற்புற்களை விட்டு செல்லப்படுகின்றன. படகின் அடிப்பகுதியிலுள்ள சில இரும்பு தகடுகளால் அவில்லியாவின் முதுகுபுறத்தை கீரிக்கொண்டு போவதற்கு பெரும் வாய்ப்பு உண்டு.

# கடல் நீர் மாசடைவது

அவில்லியா பெரும்பாலாக வலைகளில் சிக்கி காயமடைவதற்கு வாய்ப்புண்டு. ஆளமற்ற கடலில் அடிப்புறத்தில் வளரும் கடல் புற்கள் உண்ணும் போது அடியில் எறிந்து கிடக்கும் கண்ணாடி மற்றும் இரும்பு துண்டுகள் என்பவற்றினால் காயமடைவதற்கும் அதிக வாய்ப்புண்டு.

# இயநிலை மாற்றங்கள்

புயல் பலமாக அடிக்கும் போது நீரிற்குள் இருக்கும் அவில்லியாக்களை அலைகலோடு கரைக்கு எடுத்துச்செல்லப்படும். சில சந்தர்ப்பங்களில் அவ்வாறு கரைக்கு கொண்டு செல்லப்படும் அவில்லியாக்களை சேற்றிற்குள புதைந்து கிடக்கும்.

கடந்த காலத்தில் அவில்லியாவினைப்பற்றி இலங்கையில் வெகு குறைவான அளவில் ஆராய்ச்சிகள் நடைபெற்றிருந்தது. ஆதலால், அன்று கடலில் இருந்த அவில்லியாக்கள் பற்றி கணக்கிட இயலாமையால் ஏற்பட்ட குறை என்னவென்றும், அவில்லியா வேட்டை காரணமாக காலப்போக்கில் குறைந்து கொண்டே வரும் தொகையை பற்றி அறிய முடியாமையாகும்.

இலங்கை அவில்லியா பற்றி அறிவதற்கு மேலதிக ஆராய்ச்சிகள் மேட்கொள்ளத்தக்கதாகவுள்ளது.



# கடல் நீரினை துப்பரவாக வைப்போம்

கடலை மாசடையச் செய்யாமல் பேணுவது நமது கடமை என்பதை நாம் ஒரு போதும் மறந்து விடக் கூடாது. மலசல கூடங்கள், வடிகால்கள், இரசாயன தொழிற்சாலைகள் முதலியவற்றிலிருந்து கடலுக்குச் செல்லும் மாசடைந்த நீர் மற்றும் பொருட்களினால் அவில்லியாவை உடல் ரீதியாக பாதிக்கப்படுவது மட்டுமின்றி அது விரும்பி உட்கொள்ளும் கடற் புற்களையும் தாக்கக்கூடும். ஆக, இரசாயன திரவியங்கள் வெகு குறைவாக பாவிக்கப்படுவதும், கடலிற்கு குப்பை கொட்டுவதை தவிர்ப்பதும் கவணத்தில் கொள்ள வேண்டும்.

# கடல் தாவரங்களை பேணுவோம்

கப்பல் ஆகியவை நங்கூரம் பாய்ச்சும் போது கடற்புற்களிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த செயற்பாட்டில் ஈடுபடுவது மிகவும் அவசியமானது.

# புரிந்துணர்வை கட்டியெழுப்புவோம்

மக்களுக்கிடையில் அவில்லியாக்களைப் பற்றியும், அதை பேணுவதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் புரிந்துணர்வை கட்டியெழுப்பதற்கான ஆலோசனை மற்றும் வழிகாட்டினை நாம் இயன்ற அளவில் மக்களிற்கு வழங்குவோம். இந்தத் தேவையை நாங்கள் பகிரங்கமாக செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளுவோம்.

# குணம் குப்பையிலே, குப்பை கடலிலே

கடலில் குப்பை எறிவதை தவிர்ப்போம். நாளாந்தம் பாவிக்கப்படும் பொருட்களை மறு பயன்பாடு செய்வது மிகவும் உகந்த செயலாகும்.

# வேகம், விவேகம் அல்ல

படகு மற்றும் கப்பல் முதலியவை ஓட்டிச் செல்லும் போது அவில்லியாகளிற்கும் கடற் தாவரங்களிற்கும் பாதிப்பு எற்படாதவாறு ஓட்டுவது அவசியம். மிகவும் வேகமாக படகு மற்றும் கப்பல் ஓட்டுவதன் காரணமாக அவில்லியாகளிற்கு காயம் உண்டாகும். படகு மற்றும் கப்பல் ஓட்டுனரின் பொறுப்பற்ற தன்மையை தவிர்க்க வேண்டும்.

# அவில்லியாவின் சாதல், காயம் ஆகியன பற்றி தெரிவித்தல்

அவில்லியா ஒன்றினை கரையில் உயிரிழந்து கிடந்தால் அல்லது காயமடைந்த நிலையில் காணப்பட்டால் சடுதியில் அதை அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும்.



www.dilmahconservation.org

Image credits:
*Mandy Etpison (Pages 2-4, 7, 9-12)*
*Environment Agency - Abu Dhabi (Page 8)*